உ

கடவுள் துணை.



ஆத்திக்கோட்டை மேலக்காட்டு

சுப்பிரமணியக் கடவுளரின்

# சரித்திரக் கும்மி.

இஃது

ஆத்திக்கோட்டை மேலக்காட்டு

காமாட்சி வேளாரின் சந்ததிகளி லொருவராகிய

ச. வெள்ளையப்ப வேளாரின்

வேண்டுகோளின்படி,

---

மகா-ள-ள-ஸ்ரீ கன்னனூர் சி. நாராயணசாமி பிள்ளை குமாரரும்

ஜமீன் சர்வே கண்டிராக்டருமாகிய

C. N. வடிவேலுப்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

பட்டுக்கோட்டை

ஸ்ரீ காடியம்மன் பிரஸில்,

அச்சிடப்பட்டது.

1929.

16 JAN 1930
MADRAS

உ26 : 417
N29
142077

4
2502
894 SPY
411
OFFICE OF THE ... 16 JAN 1930 MADRAS

# சரித்திரம்.

---

தஞ்சைமா நகரைச்சேர்ந்தப் பட்டுக்கோட்டைக்கு வடகிழக்கு மூன்று மைல் தூரத்திலிருக்கும் ஆத்திக்கோட்டை மேலக்காட்டில் சுப்பிரமணியர் கோவிலானது இப்பொழுது சுமார் ஒரு நூற்றியைம்பது வருஷங்களுக்குமுன் வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த மேலக்காட்டு காமாட்சி வேளாரென்பவரும் அவர் பங்காளியாகிய வடகாட்டு முருகவேளார் என்பவரும் ஏக குடும்பமாக விருந்தார்கள். பங்கு பிரித்துக்கொள்ள நினைத்து அப்படி பிரித்துக்கொள் வதில் ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்கள் ஏர்ப்பட்டு அதினால் பெருத்த விரோதங்க ளேர்ப்பட்ட காரணமாக வடகாட்டு முருக வேளார் என்பவர் காமாட்சி வேளாரென்பவரைக் கொல்லுவதற்காக மாரணம் வைப்பிக்க அந்த மாரணத்தின் பயனாக அப்பொழுது நாற்பது வயதுடைய காமாட்சி வேளார் இறந்தார். காமாட்சி வேளார் இறக்கும்பொழுது அவருக்குப் பார்வதிஇராம வேளாரென இரண்டரைவயதுடைய ஒரு குழந்தையிருந்தது. அக் குழந்தைக் கும் மேல்ச்சொல்லிய மாரணத்தினுடைய உபத்திரவங்க ளிருந்தபோதிலும் அவர் கடவுளுதவியால் உயிர்ச்சேதமின்றித் தப்பித்துக்கொண்டார். பிறகு சிலகாலஞ் சென்றபின் மேல்சொல்லிய பார்வதிஇராம வேளாருக்கு முறையே இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து மேல்சொல்லிய மாரணத்தின் காரணமாக அக் குழந்தைகள் தங்காமல் இறந்துப்போயின. அதைக்கண்ட பார்வதிஇராம வேளார் என்பவர் மனம்வருந்தி விநாயகக்கடவுளைப் பூசித்து அவருக்கு ஆலயங் கட்டிவைக்க நினைத்து, அதற்குமுன் பூர்வீகமாக மேலக்காட்டிலிருந்துவரும் அய்யனார் கோவிலுக்கு வடமேற்குத் திசையில் ஒரு கோவில்கட்டி அதில் விநாயகக் கடவுளைப் பிரதிஷ்டைசெய்து பூசித்துவந்தார்கள். இப்படிச் சில தினங்கள் சென்ற பிறகு வேழமுகனருளால் ஒரு ஆண்குழந்தை பிறக்க அதற்கு வேலாயுத வேளாரெனப் பேரிட்டு வளர்த்து வந்தார்கள். குழந்தைக்கு ஒரு வயதானவுடன் மேல்சொல்லிய பில்லியின்சேஷ்டை யக் குழந்தைக்கும் துவக்க அதைக் கண்டக் குழந்தையின் தாயாரானவள் மெத்தப் பயந்து மனம் நொந்து சுப்பிரமணியக் கடவுளைப் பிரார்த்திக்க வாரம்பித்து கோவெனவலறத் தொடங்கினாள். கருணைக்கடலாகிய கந்தரும் இவள் பரிதாபநிலைக்குக் கனிந்துக் கிருபையருளவெண்ணி, மூன்றுமைல் தூரத்திலிருக்கும் வெண்டாக்கோட்டை கிராமத்தில் வசித்திருந்த வீரப்பெருமாள் வேளார் என்பவர் பேரில் சன்னதம் ஏர்ப்பட்டு அவர் தன்னையறியாமல ஆடிக்கொண்டு கையில் ஒரு அரிவாளும்

144077



சுக்குமாந்தடியுமாகக் குழந்தையிருக்கும் மேலக்காட்டுக்குவந்து தன்கையிலிருந்த அரிவாளால் பூர்வத்தில் மாறணம்வைத்திருந்த விடத்தைதோண்டி அதிலிருந்தவைகளை யெடுத்தெரிந்துவிட்டு தான் கொண்டுவந்திருந்த சுக்குமாந்தடியையும், அரிவாளையும் ஓரிடத்தில் ஊன்றி அதை இடும்பாசூரனாக பூசித்து வரும்படி உத்திரவழித்துச் சென்றார். அதின்படி ஷை பார்வதி இராம வேளாரும் அவர் மனைவியும் நடத்துவரவே குழந்தைக்கு ஏர்ப்பட்டிருந்த கஷ்டம் நிவர்த்தியாய் சுகமடைந்து வந்ததுடன் சிலதினங்கள் சென்றபின் அருணாசல வேளாரெனவும் பிறகு சிதம்பர வேளாரெனவும் இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்து சௌக்கியமாய் வளர்ந்து வந்தார்கள். காலக்கிரமத்தில் இம் மூன்று சகோதரர்களும் வாலிபதிசையடைய தங்களைப் பெற்றோர்களால் மேல்சொல்லிய சங்கதிகள் யாவும் இடும்பனைப் பூசைசெய்வதின் காறணமும் அறிந்து தங்களைக் காப்பாற்றிய கடவுளென மிக்க பய பக்தியுடன் பூசித்து வந்தார்கள். இந்தப்படியாய் இவர்கள் பூசித்துக்கொண்டு சிலதினங்கள் செல்ல அண்ணமலைப் பரதேசியென்ற ஒருவர் அந்தவிடத்திற்கு வந்து இவருடைய பக்திக்கு மெச்சி அவர் தன் கையில் வைத்துக்கொண்டிருந்த வேலாயுதத்தை அவரிடம் கொடுத்து அவிடத்தில் சுப்பிரமணியருக்காக ஒரு ஆலயம் கட்டும்படிக்கும் அதில் அந்த வேலாயுதத்தைப் பிரதிஷ்டை செய்யும்படிக்கும் சொன்னார். அம்மூன்று சகோதரர்களுமக் கருத்துக்கிசைந்து தங்களுக்குச் சகாயமாக வீ. அருணாசல வேளாரையும், மெய்க்கவேளாரென்பவரையும் கோர அவர்களும் சம்மதித்து செங்கல்வினால்கோவிலும் கோபுரமும் கோபுரத்தின்மேல் பொம்மைகளும் சாந்துவேலையால் செய்துமுடித்து மூலஸ்தானத்தில் சக்கிரஸ்தாபனமும் செய்து அந்த வேலையும் அவ்விடத்தில் பிரதிஷ்டை செய்து வாசலில் வேங்கை மரத்தையும் நட்டுவைத்து கும்பாபிஷேகம் முதலானதும் செய்து பிரதிவருஷமும் சித்திரைமாதம் சுக்கிலபக்ஷம் நவமி திதிமுதல் சதுர்தசி வரையில் ஆறு பூஜைகளும் பௌர்ணமியில் தேரோட்டம், காவடிஉத்ஸவம் முதலானதுகளுமேர்ப்படுத்தி நவமியில் சிதம்பர வேளாரும், தசமியில் வேலாயுத வேளாரும், ஏகாதசியில் அருணாசல வேளாரும், துவாதசியில் மெய்க்க வேளாரும், திரியோதசியில் வீ. அருணாசல வேளாரும், சதுர்தசியில் வடகாட்டு முருக வேளாருடைய சந்ததியார்களும் உபயம் நடத்துவதாக ஏற்படுத்திக் கொண்டும் நடத்திவந்தார்கள். அதின்படியே இப்போது அவர்களுடை சந்ததிகள் அதை தவறாமல் நடத்திவரும்படி அவர்களின் சந்ததிகளில் முதன்மையானவர்களாகிய (1) கந்தசாமி வேளாரும், (2) ரா. அருணாசல வேளாரும், (3) ச. சிதம்பர வேளாரும், (4) வீ. அ. சிதம்பர வேளாரும் முன்னின்று நடத்திவரும் இக்கோவிலின் வறலாற்றை இவருக்குப் பிறகு இவர்களுடைய

சந்ததியார்களும் இதை அறிந்துக்கொள்ளவும் இதின்படி நடத்தவும் வேணுமென்கிற எண்ணத்தால் இந்த சரித்திரத்தை அச்சிடநினைத்து இச்சரித்திரமும் இச்சரித்திரத்தைக் கும்மிகளாகவும், இடும்பாசுரன் பேரில் ஸ்துதிகளும், சுப்பிரமணியக் கடவுள் பேரில் ஸ்துதிகளும் ஏற்படுத்தித் தரும்படி மகா-ா-ஸ்ரீ சி. நாராயணசாமி பிள்ளையின் குமாரரும் ஜமீன் சர்வே காண்டிராக்டருமான C. N. வடிவேல்பிள்ளை அவர்களிடம் கேட்டுக்கொள்ள அவரும் கருணைகூர்ந்து இதை யேர்ப்படுத்தித்தர அ. நடேச வேளார், சி. முருகப்ப வேளார் இவர்களுடைய முயற்சியால் மேற்சொல்லிய சந்ததியார்கள் செலவின்மேல் இதை அச்சிடலாயிற்று.

இப்படிக்கு,

ச. வெள்ளையப்ப வேளார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

Q26:417
1129

# கு ம் மி.

## விநாயகர் துதி.

ஆத்திக்கோட்டை மேல்காட்டிலமர்ந்த சுப்பிரமணியரையு
மேற்றித்துதித்து நாங்களிசைகும்மி பாடுதற்குப்
போற்றியடிபணிந்தோம் புண்ணியரே யிப்புவியிற்
காத்தருளவந் துதிக்குங்கணபதியைக் கைதொழுவோம்.

## சரஸ்வதி துதி.

கைதனில் வீணையேந்துங் கலைமகள்பாதந்தன்னை
மெய்தனில் துதித்துநாங்கள் விந்தையாய்க்கும்மிபாடச்
செய்தஇவ் வெண்ணந்தன்னைத் திறமுடன்முடிப்பதற்குக்
கைதொழுதிட்டோம் நாங்கள் காத்தருள்புரிகுவாயே.

## சுப்பிரமணியர் துதி.

கந்தனே சுப்பிரமண்யா கடவுளே உன்னையிப்போ
விந்தையாய்த் துதித்துநாங்கள் வீரிய கும்மிபாட
வந்துமே காத்துநீரும் வகையுட னெங்களுக்குச்
சிந்தையை மகிழச்செய்யுந் திருவடி சென்னிவைப்போம்.

## கு ம் மி.

தந்திமுகவனை யீன்ற வுமையவள்
தாம்பாதம் போற்றியே கைதொழுது
சிந்தைமகிழ்ந்துச் சிவனடி சென்னியிர்ச்
சீராக வைத்துத் துதிப்போமே. 1

கந்தாமுகுந்தா கடம்பா வேலாயுத
கண்ணன் மருகோனெ வந்தருளும்
எங்கள்குடும்பத்தை முன்னின்று காப்பாற்ற
வந்த கதிர்வடி வேலவனே. 2

ஆத்திக்கோட்டை மேலக் காட்டினிலிப்போ
தமர்ந்த சுப்பிரமண்யர் கோவிலுமே
நேத்தியாய்வந்த விதமது சொல்லுவோம்
நேற்மை பெரியோர் பொருத்தருள்வீர். 3

சென்றதோர் நூறமப் பாதியுமானது
சீராய் வருஷங்க ளிப்போது
அன்றுமேமேல்காட்டு காமாட்சி வேளாரும்
பங்காளி முருக வேளாளருமே. 4

ஒத்துக் குடும்பமாய் வீற்றிருந்தகாலம்
ஒருவர்க் கொருவர் பகைமூண்டு
பங்குபாகங்களைப் பாகித்துக் கொள்வதில்
பாதகமான பகையானார். 5

சண்டைகள் முத்திப் பெருகிடவங்கு
தயாள குணங்களடி மாண்டு
கண்டவர்கண்டபடி யல்லாஞ் சொல்லிடக்
காலமு மாச்சுது வப்போது. 6

வேளார் முருகப்பனவரு மங்குச்
சீராக முன்பின்னும் யோசியாமல்
போராமை யானதோர் காரணமாகவே
மாரண வித்தையை யேவவிட்டார். 7

இட்டதோர் மாரண ஏவலினாலங்கு
பட்டாரே காமாட்சி வேளாருமே
கஷ்ட காலத்தினால்பட்ட வேளார்க்குமே
தொட்டதோ ராண்டது நாற்பதப்போ. 8

அன்றுஇறந்த வேளாருக்கு வப்போ
தருமைக் குழந்தை யொருவருண்டு
இரண்டரையாண்டு வயதான வப்பாலன்
மீண்டானெ யக்கூற்றன் வாயில்நின்றும். 9

கந்தனருளாலே மீண்டு வப்பாலனுங்
களிப்பாய்ப்பெருகி வளர்ந்து மல்லோ
வாண்பிள்ளை சிங்கமாய் வந்துஉதித்தாரே
பார்வதி ராம வேளாளருமே. 10

சிந்தைமகிழ்ந்து விருந்தார் சிலகால
மெத்தக் கவலையு மில்லாமலே
வந்ததோர் பில்லியின் காரணந்தன்னாலே
சந்தானம் ரெண்டு மழிந்ததுவே. 11

சந்தானந் தங்காத காரணத்தினாலெ
நொந்துமேபார்வதி ராம வேளார்
சிந்தைதடுமாறி தந்தி முகவனை
விந்தையாய்த் தானுந் துதித்தனரே. 12

மூஷிகவாகனா வேழைமுகத் தோனே
யேழை படுந்துயர் பார்த்திருக்க
நேர்ந்ததோஉங்கள் பெருமையிது தானோ
கார்த்திட வேணுங் கணபதியே. 13

உள்ளமிகநொந் துமையாள் புதல்வற்குத்
தெள்ளிய தோர்கோவில் கட்டவென்று
வள்ளலாம்பார்வதி ராம வேளாருமே
நல்ல முகூர்த்தமு மேர்ப்படுத்தி. 14

சீராகமுன் னுமேல்காட்டிலே நின்றதோர்
பேரான அய்யனார் கோவிலுக்கு
நேரானஅந்த வடமேற்கு தன்னிலே
வேருமொரு கோவில் தானமர்த்தி. 15

மீழவேகோவி லமர்த்தியங்கு நல்ல
வேலைமுகத் தோணையும் நிருத்தி
தோழாம் தங்கள் குடும்பங்கள்தன்னோடு
சேரவேபூசை முடித்து வந்தார். 16

அப்படியாக விருக்கின்ற வேளையி
லாதி நாராயணர் தன்னருளால்
செப்பிய வேலாயுத வேளாரென்றொரு
செல்வக் குழந்தையும் வந்துதித்தார். 17

பாலனும்வந்து உதித்துமே யப்போது
பனிரெண்டு மாதமு மானபின்னால்
சாலவேமுன்னும் சனியனாய் நின்றதோர்
யேவலும்வந் தங்கு நேர்ந்ததப்போ. 18

மாரணமானதோர் பில்லியின் கோரத்தால்
பாலனு மெத்தப் பாதபிக்க
கோவென் றலறியமாதாவு மப்போது
கூவித் துதித்தாள் கடவுளரை. 19

வள்ளிமணாளனே கந்தா வடிவேலா
புள்ளிமயி லேறும் வாகனரே
கள்ளங்கபட மரியாத வெங்களைக்
காத்திடுவாய் எங்கள் கார்த்திகேயா. 20

ஆறுமுகவேலா சுப்பிரமண்யா யெங்க
ளாருயிர் காக்கும் கடவுளரே
கோரியஉம்மைத் துதித்துநின்ற வெங்கள்
கோரிக்கை யீடேற இப்புவியில். 21

சங்காரசம்போ சதாசிவ னீன்றிட்ட
ஷண்முக சுப்ரமண்ய வேலா
எங்களிடர்களைத் தீர்த்திடவே யிங்கு
வந்து உதித்திடுங்கந்த வேலா. 22

இந்த உலகத்தி லுந்தனையன்றி வே
　　ருண்டோ குமா குருபரனே
வந்துவடியார்கள் சிந்தையைத் தீர்த்திடக்
　　கந்தனேவந்து கருணை செய்வாய். 23

தந்தைக் குபதேசம் சொன்னகுருபர
　　சுவாமி சரவண ஷண்முகனே
உங்களடியாரைக் காப்பாற்ற வேணுங்
　　கடம்பா கதிர்வடி வேலவனே. 24

வள்ளித்தினைப்புனஞ் சென்றவனே யங்கு
　　வேடுவ ரூபமும் பூண்டவனே
கள்ளத்தனமா யொளித்திருக்க வங்குக்
　　கானில் வேங்கை மாமானவனே. 25

என்றுமவளு மலறித் துதித்திடக்
　　கண்டார் கதிர்வடி வேலவரும்
வெண்டாக்கோட்டைவாழ் வீரப்பெருமாள் மேல்க்
　　கொண்டாரே தன்னருள் சன்னதமாய். 26

சன்னதம் பூண்டதோர் வேளாருமப்போது
　　தன்னை யறியாமலாடி யல்லோ
உன்னதமாகவே கையி லரிவாளு
　　மோங்கியதோர் சுக்குமாந் தடியும். 27

வந்ததோர் சன்னதக் கந்தனருளையும்
　　விந்தையாய்க் கண்ட ஜனங்களுமே
எங்கள்கருணைக் கடலான கந்தரும்
　　வந்தாரே யென்று வணங்கினர்கள். 28

எங்களைக்காத்திட வேணுமையா சுவாமி
　　யெங்கள்குல தெய்வ மானவரெ
கெங்கைசடையில் தரித்தோன் புதல்வரே
　　கந்தா கதிர்வேல னவரே. 29

வள்ளிதைவானை மணவாளா வந்த
　　மௌன குருபர தேசிகனே
பிள்ளைபடுந்துயர் தீர்த்தருள்வா யிப்போ
　　போற்றினேன் கண்ணன் மருகோனே. 30

என்றுமிவர் சொல்லிக் கைகுவித்துமல்லோ
　　நின்றதோர் பாவனை கண்டுமவர்
கொண்டதோர்கை வாளால் மண்ணைப்பறித்துமே
　　கோதிளடுத்தாரே பில்லி தனை. 31

அஞ்சாதீ ரஞ்சாதீர்நீங்களுமே யிப்போத்
தஞ்சம் கதிர்வடி வேலவரும்
வஞ்சனையானதோர் பில்லியை நீக்கியே
வந்துஉதிப்பாரே இந்த விடம். 32

என்றுவுரைத்துமே யேதுசெய்தா ரங்குத்
தன்கையில் கொண்டதோர் ஆயுதத்தை
நின்றஇடும்பனைப் பூசித்துக் கொள்ளவே
நாட்டிக் கொடுத்தாரே யவ்விடத்தில் 33

ஆயுதம் நாட்டிய சன்னதமானவர்
அருமை இடும்பனைப் பூசிக்கவும்
போதனை செய்துமே போனபிறகங்கு
பாலனும் க்ஷேமமாய் வாழ்ந்துவர. 34

கண்டஜனங்களும் சந்தோஷ மாகவே
கைகூப்பி னின்று விடும்பனையும்
சிந்தைமகிழ்ந்துமே பூசித்து வந்தார்கள்
சீரான விப்புவி தன்னிலப்போ. 35

அன்று பழனியிலஞ்சா மனதுடன்
நின்றுமுதர்ப் பூசை கொண்டவனே
இன்றுஎழியோ ரிடர்தனைத் தீர்க்கவே
வந்தஇடும் பாசுர தேவா. 36

என்றுமேபாடித் துதிசெய்து பூசித்து
வன்றுஞ்சில தினமான பின்னால்
உண்டானபிள்ளை யருணசல வேளா
ரென்றதோர் சந்தானம் சந்தோஷமாய். 37

பிள்ளைபிறந்து சுகமாகவே யங்குத்
துள்ளி விளையாடி யேவளர
வள்ளிதைவானைக் குகந்த மணாளனும்
வள்ளல் சுப்பிரமண்யர் காத்துவந்தார். 38

இந்தப்படியுஞ் சிலகாலஞ் சென்றபின்
கந்த னருளாலெ யன்றுமல்லோ
வந்ததோர் சந்தானஞ் சிந்தைமகிழச்
சிதம்பர வேளா ரெனப்புகழ்ந்தார். 39

இப்படியாகப் பெருகி வளர்ந்ததோர்
சர்ப்புத்திரர் மூவரு மொற்றுமையாய்
கர்ப்பனையாகவு மங்கு நடந்ததோர்
காரணங் கேட்டு மகிழ்ந்தாரே. 40

600 008

தங்களைக் காற்கவும் வந்துஉதித்ததோர்
தண்டாயுதபாணி தன் னருளுங்
கண்டாரிடும்பனாய் நின்ற விபரமுங்
கொண்டாடிப் பூசித்து வந்தார்களே. 41

அண்ணாமலைப் பரதேசிய ரென்றொரு
புண்ணிய வாளனுமங்கு வந்து
விண்ணாணமாகஇவர் செய்யும் பூசைகள்
கண்ணாறக் கண்டு மகிழ்ந்தனரே. 42

வெண்ணை திருடிய கண்ணன் மருகோனும்
வேந்த னசுரகுல மறுத்த
மன்னனையங்கு துதிப்பதைக் கண்டாரெ
யண்ணாமலைப் பர தேசியுமே. 43

கண்டாரெயந்தப் பரதேசி யப்போது
கொண்டாரெ தன்னுள்ளம் பொங்கிடவே
ஈன்றாரெ தன் கையிருந்த வேலாயுதம்
ஆண்டவன் சன்னதி கட்டுமென்றார். 44

வேலாயுதந்தன்னைக் கண்டவ ரப்போது
வேலு முருகக் கடவுளுக்கு
ஆலயங்கட்டத் துணிந்தாரெ யப்போதவ்
வேலையுமங்கு பிரதிஷ்டை செய்ய. 45

எண்ணிய யெண்ணத்தை யீடேற்றிவைக்கவே
புண்ணியவான்கள் சகாயங் கோர
நன்னயமாக வருணாசல வேளார்
மெய்க்க வேளாருந் துணைபுரிந்தார். 46

மூலஸ்த் தானங்களுமேர்ப்படுத்தி யங்கு
முக்கியமாய் சக்கிரஸ்த் தாபனமும்
மானதோரிட்டிகை கல்லினா லாலயம்
கோலமாய்க் கட்டிய மைத்தனர்கள். 47

கோவிலுங் கட்டிமுடித்தாரெ யங்கு
கோபுர பொம்மைகள் தானமர்த்தி
மூலஸ்தானந் தனில்வேலைப் பிரதிஷ்டையும்
வாசலில்வேங்கை மரமும் வைத்தார். 48

கும்பாபிஷேகமுந் தான்முடித்தா ரங்குக்
கோலா கலமாக வப்பொழுது
சாலவேசித்திரா பர்வ மதனிலெ
சாற்றினார் பூஜைக ளாருமல்லோ. 49

இந்தவிதமா யமற்ந்ததோர் கோவிலில்
சந்தோஷ மாகவே பூசைகளை
வந்துஉதித்தக் குடும்பத்தா ரெல்லோருஞ்
சேர்ந்து நடத்தியெ வாரார்களே. 50

கும்மியடிக்குமிப் பாலரையு மும்மைக்
கோரியேவந்து துதிப் போரையுஞ்
செம்மையாய்பூசைகள் செய்வோரையும் வந்து
தேசிகா காப்பாற்ற வேணுமையா. 51

எங்கள்குடும்பம் விளக்கிய ஷண்முகா
உங்கள் சரித்திரக் கும்மியாக
வந்துஉரைத்த வடிவேலு பிள்ளையின்
சிந்தைமகிழ வருள் புரிவீர். 52

நாங்களும்வாழ வருளவேணும் கந்தா
நன்னயமா யிதைக் கேட்டபேருங்
கோர்த்துமேஅச்சினி விட்டபேரும் வாழக்
கோரித் துதித்தோமே இப்பொழுது. 53

## இடும்பாசுரன் ஸ்துதி.

ஆறுமுகமானவற்கோ ரன்பாகி
யசுரகுலமதனில்வந் துதித்தமூர்த்தி
கோரினோமிடர் தீர்க்கஉன்னையுந்தான்
குமாரசுருபார்க்குதவுங் கோவேநீயும்
பாரிலுள்ளோர் துதித்திடவும் பன்பாய்வந்துப்
பகருவாய்உன்கருணை ஜெகத்தோர்க்கையா
காரணமாய்நின்றதோ ரிடும்பாவுன்னைக்
கடவுளென்றேநாங்களுமே வணங்கினோமே.

பழனிவேல்முருகனுக்குப் பணியாளாகிப்
பார்தனிலேவந் துதித்துபக்தனாக
தொழுதுமேநின்றவுந்த னடியார்நாங்கள்
துதிக்கின்றோமெங்களது துயரந்தீர்ப்பாய்
பிழைகளதுசெய்திருந்தா லுந்தானையா
பொருத்தருளவேணுமெங்கள் புண்ணியமூர்த்தி
அசுரகுலமருத்தவற்குத் துணையாளான
அய்யனேவந்தருளும் அசுரர்கோவே.

## சுப்பிரமணியர் ஸ்துதி.

ஆறுமுகமானவனே ஐயாபோற்றி
அசுரகுலமருத்தவனே அடியோர்நாங்கள்
கோரியதோரிடர்தீர்ப்பாய் குழந்தைவேலா
குருபரனேகுறவள்ளிக் குகந்தமூர்த்தி
பார்வதியாளீன்றெடுத்த புதல்வாயிப்போ
பாகுடனே துதிசெய்து பணிந்துநின்றேம்
சீர்பெரியஅருள்பெருகுங் குமாராவுந்தன்
திருநாமமென்னாளும் போற்றி போற்றி.

---

## சுப்பிரமணியர் விருத்தம்.

சரவணபவனேயுன்னைச் சதமெனவெண்ணி நாங்கள்
நறுமலர்பூசைசெய்தோம் நாயகா எங்களுக்குத்
திருவருளளித்தாட்கொண்டு தீவினையகற்ற விப்போ
வருகுவாய்யெங்கள்மூர்த்தி வள்ளிதை வானைபாகா. 1

கந்தனே கடம்பவேலா கண்ணனார் மருகனான
உந்தனைத்துதித்துநாங்க ளுள்ளமுமுருகி நொந்துச்
சிந்தையாய்வாடுகின்றேம் சிவனுடபுதல்வா யிப்போ
வந்துமேயருளவேணும் வள்ளிதை வானைபாகா. 2

ஷண்முகாவுன்னைப்போற்றிச் சரணமாய்க் கைகுவித்தோ
மெண்ணியகருமமெல்லா மெங்களுக் குகந்துதீர்க்கப்
புண்ணியவானேஇந்தப் புவிதனிலுனைப்போ லுண்டோ
மன்னவாவந்துகார்ப்பாய் வள்ளிதை வானைபாகா. 3

கதிர்வடிவேலாவுந்தன் கருணையைக் கோரிநாங்கள்
பதரியேயிங்குவந்துப் பாங்குடன்தயங்கு கின்றேம்
திருவவதாரமான திருமாலுக் குகந்தவின்ப
மருகனேவந்துகார்ப்பாய் வள்ளிதை வானைபாகா. 4

சங்கரற்குபதேசித்த ஷண்முகக் கடவுளான
உங்களையிப் போதெங்களுளமதில் தியானம்செய்தோ
மெங்களைக்காற்கநீயு மெழிலுடன்வந்தாட்க் கொள்வாய்
மங்கைபார்வதியாள்மைந்தா வள்ளிதை வானைபாகா. 5

பச்சைமாமயிலிலேறும் பழனியாண்டவனை யுன்னை
இச்சையாய்த்துதித்துநாங்க ளேங்கியே தவித்துநின்றோம்
கச்சணிந்தவனேகந்தா கடவுளே கார்த்திகேயா
வச்சிரவேலாயெங்கள் வள்ளிதை வானைபாகா. 6

திருத்தணிவேலாஉன்னைச் சித்தத்திலெண்ணி நாங்கள்
பெருத்தவிக்கவலைதீரப் போற்றியே வணங்குகின்றோம்
கருத்துடனெங்களையா கணபதிக் கிளையகோவே
வருத்தமேனுகந்துகாக்க வள்ளிதை வானைபாகா. 7

பழனியில்வாழுங்கந்தா பாலனே சுப்பிரமண்யா
இப்பொழுதெனவந்துகாரும் புண்ணியகோமா நாங்கள்
பிழையதுசெய்தாலுந்தான் பொறுப்பதுங் கடமையன்றோ
வருகுவாய்எங்களீசா வள்ளிதை வானைபாகா. 8

அன்றுமேதினைப்புனத்தி லருமையாய் வள்ளிக்காகச்
சென்றுவேடுவனாய்நின்றச் செல்வனே குழந்தைவேலா
என்றுமுன்பாதம்நாங்க ளெண்ணியே போற்றிசெய்ய
வந்துமேவுதவவேணும் வள்ளிதை வானைபாகா. 9

போற்றினோம்சுப்பிரமணியா புகழுடனெங்களை நீ
காத்திடவேணுமென்ற கருணையு முனக்குண்டாக
தோற்றியமனத்தால்நாங்கள் தொடர்ந்தவிப் பத்துஞ்சொல்லி
வாழ்த்தினோமெங்களீசா வள்ளிதை வானைபாகா. 10

நாங்களும்வாழ்கவேதா னலமுடனெங்களுக்கு
நேர்ந்ததோரிடரைத்தீர்த்த நெடியஷண்முகனார்கும்மி
கூர்ந்துமேல்துதிகள்சொல்லிக் கொடிவழிவிளங்கச்செய்த
காரணவடிவேல்பிள்ளை கருணையென்னாளும் வாழி.

14907
600 006

ஸ்ரீ நாடியம்மன் பிரஸ், போஸ்டாபீஸ் ரோடு, பட்டுக்கே